**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | | |
|---|---|---|
| CC No. | : | 38/2020 |
| Name | : | Kaliappan |
| P.W. | : | 3 |
| Father Name | : | |
| Village | : | |
| Taluk | : | Madathukulam |
| Occupation | : | |
| Age | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.06.2025

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது வயலூாில் வசித்து வருகிறேன். ஸ்ரீனிவாசா பேப்பர் மில்லில் வேலை செய்து வருகிறேன். சுமார் 4-5 வருடங்களுக்கு முன்பு நான் பள்ளியில் படித்துக்கொண்டிருந்த போது மாலை சுமார் 06.00 மணியளவில் நான் பள்ளியில் இருந்து வீட்டிற்கு சென்று கொண்டிருந்த போது அமராவதி ஆற்றிற்கு செல்லும் வழியில் மேலிருந்து பார்த்தேன் கூட்டமாக இருந்தது நான் சென்று பார்த்தேன் எனக்கு தெரிந்த விக்னேஷ் மற்றும் பிரேம்குமார் அண்ணன்கள் அங்கு இருந்தார்கள் விக்னேஷ் கீழே விழுந்து கிடந்தார் சாதிக் மற்றும் மாசி அண்ணன்கள் வாய்க்கால் திட்டு மீது அமர்ந்திருந்தார்கள். பீல் பாட்டில்கள் சாதிக் மற்றும் மாசியிடம் இருந்தது. நான் பார்க்கும் போது விக்னேஷை சாதிக் பீர் பாட்டிலால் அடித்தார். பீர் பாட்டிலை வாய்க்காலில் வீசிவிட்டு இரண்டு பேரும் ஓடிவிட்டார்கள். பிரேம் என்னை கீழே வருமாறு அழைத்தார். விக்னேஷ் என்பவருக்கு தலையில் காயம் ஏற்பட்ட ரத்தம் வழிந்தது. மடத்துக்குளம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம் அங்கு அவருக்கு சிகிச்சை அளித்தார்கள்.

சாதிக் மற்றும் மாசி இருவரையும் நேரில் பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நான் ஆற்றுபாலத்தில் மேலே நடந்து சென்று கொண்டிருந்தேன் என்றால் சரிதான். எதற்கு கூட்டம் இருந்தது என்றால் விக்னேஷ் மற்றும் பிரேம் குமார் இருந்தார்கள் சாதிக் மற்றும் மாசி ஆகியோர் இருந்தார்கள். இவர்கள் நான்கு பேர் மட்டும் அங்கு இருந்தார்கள் வேறு யாரும் இல்லை என்றால் சரிதான். விக்னேஷ் குமார் கீழே படுத்திருந்தாரா என்றால் விக்னேஷை சாதிக் என்பவர் கீழே தள்ளிவிட்டார். தள்ளிவிட்டதை நான் பார்த்தேனா என்றால் ஆமாம். நான் மேலே இருந்து பார்க்கும் போதே அடிப்பட்டிருந்தது தெரிந்ததா என்றால் ஆமாம்.

(2) சாதிக் என்பவர் விக்னேஷை நான் மேலே நின்றிருந்த போது அடித்தாரா அல்லது கீழே வந்த உடன் அடித்தாரா என்றால் நான் மேலே நின்றிருந்த போது அடித்தார். நான் சம்பவ இடத்திற்கு சென்ற போது மாசி மற்றும் சாதிக் இருவரும் அங்கே இருந்தார்களா என்றால் இல்லை ஓடிவிட்டார்கள். விக்னேஷ் குமாரை நானும் பிரேம் குமாரும் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். விக்னேஷ் குமாருக்கு மருத்துவமனையில் தையல் போடப்பட்டதா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/-M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 38/2020 |
| Name | : Balamurugan |
| P.W. | : 4 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.06.2025

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் தற்போது மடத்துக்குளத்தில் வசித்து வருகிறேன். விவசாயம் பார்க்கிறேன். **29.08.2019** ம் தேதி மாலை **05.30 – 06** மணிக்கு ஆத்து பாலத்திற்கு மாடு பிடிக்க சென்றேன். பசங்க **2-3** பேர் அடித்துக்கொண்டார்கள். மறு நாள் மதியம் **01.30** மணியளவில் மாட்டிற்கு தண்ணீர் காட்ட போனேன் அப்போது மடத்துக்குளம் உதவி ஆய்வாளர் அங்கு வந்து விசாரித்தார்கள். நான் கையொப்பம் போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மஜரில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். **30.08.2019 தேதியிட்ட பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**(1)** நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று நான் படித்துப்

பார்க்கவில்லை. போலீசார் கேட்டுக்கொண்டதற்காக கையொப்பம் போட்டேன்.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

Sd/-M.Dheenadhayalan, B.A., B.L.,

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்

மடத்துக்குளம்